தமிழகத்தில் 43,051 மையங்களில் போலியோ சொட்டு மருந்து முகாம்

முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையில் தொடங்கி வைத்தார்

சென்னை, பிப். 28: மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாமினை குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தடுப்பூசி திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு 11 வகையான தடுப்பூசிகளை பயன்படுத்தி தடுக்கப்படக்கூடிய 12 வகையான நோய்களுக்கு எதிராக பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் கடந்த 2004ம் ஆண்டிலிருந்தும், இந்தியாவில் 2014ம் ஆண்டிலிருந்தும் போலியோ இல்லாத நிலை உள்ளது. இந்தநிலை தொடர்ந்திடும் வகையில், இந்த ஆண்டு 27வது சுற்று தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் நேற்று மாநிலம் முழுவதும் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்கள் என மொத்தம் 43,051 மையங்களில் தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. இம்மையங்களில் 0-5 வயது வரையுள்ள 57.61 லட்சம் குழந்தைகளுக்கு (6 வயதிற்குட்பட்ட கூடுதலான குழந்தைகள் உட்பட) போலியோ சொட்டு மருந்து வழங்க திட்டமிடப்பட்டது.

தீவிர பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம் நாளான நேற்று கோவிட்-19 வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, குழந்தைகளின் வசதிக்காக முக்கிய பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், சோதனைச் சாவடிகள், விமான நிலையங்களில் பயணவழி மையங்களிலும் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. மேலும், நடமாடும் குழுக்கள் மூலமாக தொலைதூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கும் சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. போலியோ சொட்டு மருந்து வழங்கும் இப்பணியில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட சுகாதாரப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சென்னை ஆழ்வார்பேட்டை பகுதியில் அமைக்கப்பட்ட சொட்டு மருந்து முகாமை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார். அப்போது, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், குழந்தைகளுக்கு சொட்டு மருந்தினை செலுத்தி அக்குழந்தைகளுக்கு பொம்மையையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, மக்கள் நல்வாழ்வுத் துறை செயலாளர் ராதாகிருஷ்ணன், சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, மக்கள் நல்வாழ்வுத் துறை சிறப்புப் பணி அலுவலர் பி.செந்தில் குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் செல்வவிநாயகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பின்னர், மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழகத்தில் பொதுமக்கள் ஒத்துழைப்பால் 2004ம் ஆண்டு முதல் 18 ஆண்டுகளாக போலியோ இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து இதே நிலை நீடிக்க 5 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து செலுத்தி கொள்வது அவசியம். ஒருசில நாடுகளில் போலியோ முற்றிலும் ஒழிக்கப்படாத நிலையில், தொடர்ந்து போலியோ தடுப்பு மருந்தினை கட்டாயம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மேலும், தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக 2 லட்சம் பணியாளர்கள் போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தமிழகம் முழுவதும் 43 ஆயிரத்து 500 முகாம்கள் அமைக்கப்பட்டு 57 லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்று திட்டமிடப்பட்ட படி 95 சதவீத குழந்தைகளுக்கு போலியோ தடுப்பு மருந்து செலுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கொரனோ பரவல் குறைந்துள்ள நிலையில் ஏற்கனவே பெரும்பாலான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு உள்ளது. 10 சதவீதத்திற்கும் மேல் கொரோனோ பாதிப்பு உள்ள பகுதிகளில் மட்டும் சில கட்டுப்பாடுகளை விதிக்க அந்தந்த பகுதியில் உள்ள சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. 1.23 கோடி பேர் இன்னும் இரண்டாம் தவணை தடுப்பூசியை குறித்த காலத்திற்குள்ளாக செலுத்திக் கொள்ளவில்லை.

எனவே, குறித்த காலத்திற்குள் பொதுமக்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன்வர வேண்டும். முழுவதுமாக கொரனோ பாதிப்பு தமிழகத்தை விட்டு இன்னும் விலகவில்லை. எனவே அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பொதுமக்கள் முறையாக பின்பற்றுதல் அவசியம். இவ்வாறு கூறினார்.

▶ சென்னை தேனாம்பேட்டை திருவள்ளுவர் சாலையில் முதல்வர் மு.க. ஸ்டாலின், போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமை துவக்கி வைத்து குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கினார். அருகில் அமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு செயலர் ராதாகிருஷ்ணன், சென்னை மாநகர கமிஷனர் ககன்தீப் சிங் பேடி உள்ளிட்ட அதிகாரிகள்.

இலங்கை கடற்படை அட்டூழியம் தொடர்கிறது

ராமேஸ்வரம் மீனவர்கள் எட்டு பேர் சிறைபிடிப்பு

கிளிநொச்சி சிறையில் அடைப்பு

ராமேஸ்வரம், பிப். 28: மீன் பிடித்துக் கொண்டிருந்த ராமேஸ்வரம் மீனவர்கள் 8 பேரை, எல்லை தாண்டியதாக குற்றம் சாட்டி, இலங்கை கடற்படையினர் படகுடன் சிறைபிடித்தனர். நேற்று மாலை நீதிமன்றத்தில் மீனவர்கள் ஆஜர்படுத்தப்பட்டு கிளிநொச்சி சிறையில் அடைக்கப்பட்டனர்.

ராமேஸ்வரத்தில் இருந்து நேற்று முன்தினம் 500க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் பாக் ஜலசந்தி கடல் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்றனர். இரவில் தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்கும் இடையே மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது ரோந்து கப்பலில் வந்த இலங்கை கடற்படையினர் படகுகளை வழிமறித்து, மீனவர்களை எச்சரித்து மிரட்டினர். எல்லை தாண்டியதாக குற்றம் சாட்டி, தங்கச்சிமடம் மீனவர் ராயப்பனுக்கு சொந்தமான படகையும், படகில் இருந்த மீனவர்கள் 8 பேரையும் சிறை பிடித்து, இரவோடு இரவாக தலைமன்னார் கடற்படை முகாமிற்கு கொண்டு சென்றனர்.

இதனால் அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மற்ற மீனவர்கள், அச்சமடைந்து உடனடியாக வேறு பகுதிகளுக்கு தங்களது படகுகளை ஓட்டிச் சென்றனர். இலங்கை கடற்படையினரின் நடவடிக்கையால் இரவில் மீன் பிடித்து நேற்று காலை கரை திரும்பிய படகுகளில் மீன்களின் அளவு மிகவும் குறைவாக இருந்தது. இதனிடையே தலைமன்னார் கடற்படை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்ட தங்கச்சிமடத்தை சேர்ந்த மீனவர்கள் ரமேஷ் (40), ரோடிக் (18), அஜித் (25), கொலம்பஸ் (52), இமான் (22), வின்சன் (23), பவுத்தி (19) மற்றும் இஸ்ரேல் (20) ஆகியோரிடம் கடற்படை உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

பின்னர் இலங்கை கடல்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் மீனவர்கள் 8 பேரும் ஒப்படைக்கப்பட்டனர். 8 மீனவர்களும் நேற்று மாலை கிளிநெச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். நீதிபதி சிவபாத சுந்தரம் விசாரணை செய்து, மீனவர்களை மார்ச் 11ம் தேதி வரை சிறையில் அடைக்க உத்தரவிட்டார். இதையடுத்து, அவர்கள் கிளிநொச்சி சிறையில் அடைக்கப்பட்டனர்.

தெலங்கானா விமான விபத்து

சென்னை பயிற்சி விமானி உயிரிழப்பு முதல்வர் இரங்கல்

சென்னை, பிப். 28: தெலங்கானா மாநிலத்தில் நடந்த விமான விபத்தில் சென்னையைச் சேர்ந்த பயிற்சி விமானி மகிமா உயிரிழந்ததற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் சமூக வலைதளங்களில் வெளியிட்ட பதிவு: தெலங்கானா மாநிலத்தில் நடந்த விமான விபத்தில் சென்னையைச் சேர்ந்த பயிற்சி விமானி மகிமா உயிரிழந்த செய்தியறிந்து வேதனை அடைந்தேன். அவரது குடும்பத்தினர், உறவினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு முதல்வர் கூறியுள்ளார்.

CHENNAI METRO RAIL LIMITED
(A Joint Venture of Govt. of India & Govt. of Tamil Nadu)
Admin Building, CMRL Depot, Poonamallee High Road, Koyambedu, Chennai - 600 107. Phone: 044 2379 2000

TENDER NOTICE
File No: EMMS-STAGE 2A & Ph1 Extension- 2022 Dated:28/02/2022
NIT No: EMMS-STAGE 2A & Ph1 Extension- 2022
e-procurement tender
National Competitive Bidding
CMRL invites digitally signed tender through e-procurement portal from reputed, experienced, financially sound, eligible applicants, who fulfil the qualification criteria as mentioned in the tender through National Competitive Bidding under Single Stage Two Envelope (Technical & Financial) system for the works as detailed below:
"TENDER FOR PROVIDING ELECTRICAL AND MECHANICAL FACILITY MAINTENANCE SERVICES IN ELEVEN UNDER GROUND METRO STATIONS AND IT'S ASSOCIATED TUNNELS (CORRIDOR-2: TIRUMANAGALAM to CHENNAI CENTRAL & PHASE-1 EXTENSION: THIYAGARAYA COLLEGE to TONDIARPET), SEVEN ELEVATED METRO STATIONS (PHASE-1 EXTENSION: NEW WASHERMENPET to WIMCO NAGAR DEPOT STATION), AND ONE ELEVATED DEPOT (WIMCO NAGAR)".
For further details, please visit e-procurement website:
For NIT : www.chennaimetrorail.org
For Downloading Bid Documents : http://eprocure.gov.in/eprocure/app
DIPR/759/tender/2022 Director (Systems & Operations)
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

விற்பனை அதிகாரிகள் தேவை
ஃபேஷன் துறையில் பல நாடுகளில் வெற்றிகரமாக வர்த்தகம் செய்து வரும் ஒரு முன்னணி இந்திய நிறுவனத்திற்க்கு, தமிழ்நாட்டில் சேல்ஸ் மற்றும் மார்கெட்டிங் துறையில் பணிபுரிய தகுதி வாய்ந்த நபர்கள் தேவை.
சீனியர் சேல்ஸ் ஆபிசர்: டிஸ்டிரிப்யூட்டர்கள் & ரீடெயிலர்களைக் கையாள்வதிலும் விற்பனை பிரிவிலும் குறைந்த பட்சம் 4 ஆண்டு அனுபவம், FMCG துறையிலும், ஒரு குழுவினரைக் கையாள்வதிலும் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
சேல்ஸ் ஆபிசர்: சேல்ஸ் பிரிவிலும், டிஸ்டிரிப்யூட்டர்கள் & ரீடெயிலர்களைக் கையாள்வதிலும் குறைந்தது 2-3 ஆண்டுகள் அனுபவம். FMCG துறையில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
தகுதிகள்: • MBA பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு முன்னுரிமை. • நன்கு பேசவும் எழுதவும், விவரங்களை வழங்கவும் தெரிந்திருக்கவேண்டும்.(தமிழ், ஆங்கிலம். கூடுதல் மொழிகள் தெரிந்திருப்பது நல்லது) • குறிப்பிட்ட காலத்திற்குள் வேலைகளை முடிக்கும் திறனும், முன்வந்து வேலைகளைச் செய்யும் திறனும் தேவை. • பயணங்கள் மேற்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.
சரியாக தகுதிகள் உள்ளவர்களுக்கு சம்பளம் ஒரு தடையாக இருக்காது. விருப்பமுள்ளவர்கள் சுய விவரக் குறிப்புகளை sales.profiles@rediffmail.com க்கு அனுப்பவும்.

சென்னை, கோவை மண்டல களப்பணியில் முறைகேடு

15 நாட்களில் அறிக்கை வழங்க வேண்டும்

பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி உத்தரவு

சென்னை, பிப். 28: சென்னை, கோவை மண்டலத்தில் களப்பணியில் நடந்த முறைகேடு தொடர்பாக புகார் வந்துள்ளது. இது குறித்து 15 நாட்களில் சார்பதிவாளர்கள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். மேலும் போலி ஆவணங்களை காட்டி பத்திரப்பதிவு குறித்து வந்துள்ள புகார்கள் குறித்து மறு ஆய்வு செய்து 1 வாரத்துக்குள் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி டிஐஜிக்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

திமுக ஆட்சி பொறுப்பேற்ற நிலையில், தமிழக அரசின் பத்திரப்பதிவுத் துறையில் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. குறிப்பாக, பொதுமக்கள் பத்திரம் பதிவு செய்த அன்றைய தினமே ஆவணங்கள் பெறும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், பதிவுத்துறை சார்பில் நிலுவையில் வைக்கப்பட்ட ஆவணங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவாய் ஈட்டப்பட்டன. அதே போன்று சரியான வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்து, ஆவணங்கள் பதிவு செய்யும் நிலை தற்போது உருவாகியுள்ளது. இதன் காரணமாக பத்திரப்பதிவுத்துறையின் வருவாய் பல மடங்கு பெருகியுள்ளது. நடப்பாண்டில் தற்போது வரை ₹12 ஆயிரம் கோடிக்கு மேல் வருவாய் ஈட்டி வருகிறது.

இந்நிலையில், கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் மாநிலத்தில் பல இடங்களில் போலி ஆவணங்களை சமர்ப்பித்து பத்திரப்பதிவு செய்து இருப்பதும் தெரியவந்துள்ளது. மேலும், களப்பணியில் பல்வேறு முறைகேடுகள் நடந்து இருப்பதாக தெரிகிறது. அதே நேரத்தில் பல சார் பதிவாளர் அலுவலகங்களில் வழிகாட்டி மதிப்பை குறைத்து பத்திரப்பதிவு செய்து இருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி தலைமையில் பதிவுத்துறை செயலாளர் ஜோதி நிர்மலாசாமி, ஐஜி சிவன் அருள் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்ட ஆய்வுக்கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து பதிவுத்துறை வட்டாரங்கள் கூறியதாவது:

■ பதிவுத்துறை வருவாய் இலக்கை அனைவரும் அடைய வேண்டும். இலக்கை அடையாத சார்பதிவாளர் அலுவலகங்களுக்கான காரணங்களை கண்டறிய வேண்டும். நிலுவை ஆவணங்களை ஆய்வு செய்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

■ 22 ஏ இனங்கள் பொருத்து (போலியான ஆவணங்களை காட்டி பத்திரப்பதிவு தொடர்பாக) மாவட்ட பதிவாளர் மற்றும் டிஐஜி மீள் ஆய்வு செய்து 1 வாரகாலத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இதில் தவறுகள் இருந்தால் அதாவது ஆய்வுக்கு பிறகு 22ஏ கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் பொறுப்பு கிடையாது. மாவட்ட பதிவாளர் மற்றும் டிஐஜி மட்டுமே பொறுப்பாவார்.

■ சென்னை மற்றும் கோவை மண்டலத்தில் களப்பணியில் முறைகேடு நடப்பதாக தகவல் வந்துள்ளதால் இந்த மண்டலங்களில் கண்காணிப்பு செய்து 15 நாட்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

■ இதர மண்டலங்களில் புகார் வந்தால் இதுபோன்ற குழு அமைக்கப்படும்.

■ குக்கிராமம் மற்றும் தாலுகா வாரியாக கிராமங்கள் மறுசீரமைப்பை விரைவு படுத்தி முடிக்க வேண்டும். குறிப்பாக இது தொடர்பாக எனக்கு தெரியவில்லை என்று பொதுமக்களிடமிருந்து புகார் வரக்கூடாது. ஆதலால் மாவட்ட பதிவாளர் அளவில் நாளிதழில் விளம்பரம் கொடுக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகளுக்கு இவ்விஷயம் தெரிவிக்கப்பட வேண்டும். அதன் பிறகு மக்கள் கருத்துகேட்பு கூட்டம் நடத்தி அரசுக்கு உரிய வழிமுறையில் அனுப்ப வேண்டும்.

■ வழிகாட்டி மதிப்பை குறைத்து பத்திரப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தேவையில்லாமல் 47 ஏ நடவடிக்கைக்கு ஆவணத்தை உட்படுத்தக் கூடாது. 47ஏ இது தொடர்பாக கண்காணிப்பு செய்ய வேண்டும்.

■ பொதுமக்களை கனிவுடன் நடத்த வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு தயார்... முதல் பக்க தொடர்ச்சி

கெர்சனிலும் தீவிர தாக்குதல் நடத்தியது. இதன் மூலம் கெர்சன் மற்றும் பெர்ட்யான்ஸ்க் ஆகிய 2 நகரங்களை ரஷ்ய ராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் நேற்று அறிவித்தது. இதேபோல், 2வது பெரிய நகரமான கார்கீவ்வும் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததாக ரஷ்யா முதலில் அறிவித்தது. ஆனால், தீவிர எதிர் தாக்குதல் மூலம் ரஷ்ய படைகள் விரட்டப்பட்டு உள்ளதாகவும், மீண்டும் கார்கீவ் நகரம் தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் உக்ரைன் அரசு உறுதி செய்தது. அதே சமயம், நேற்று முன்தினம் இரவு முதல் அதிகாலை வரை ரஷ்ய ராணுவம் குடியிருப்பு பகுதிகளை குறிவைத்து ஏவுகணை, பீரங்கி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றம்சாட்டி உள்ளார்.

சர்வதேச நாடுகளின் எதிர்ப்பை மீறி உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா மீது பல நாடுகள் பல்வேறு பொருளாதார தடைகளை விதித்து வரும் நிலையில், ரஷ்யாவுக்கு எதிராக தனியாக போர் புரியும் உக்ரைனுக்கு ஆதரவுகள் பெருகி உள்ளன. ஏற்கனவே பல்வேறு ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்களை வழங்கிய நிலையில், ஜெர்மனி, ஆஸ்திரேலியா உள்ளிட்ட பல உலக நாடுகள் நேற்றும் ஆயுதங்களை அனுப்பின. தொடர்ந்து பல நாடுகள் ஆயுத உதவி செய்து வருவது ரஷ்யாவுக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. இதுமட்டுமின்றி, ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இருந்து ரஷ்யாவை வெளியேற்ற வேண்டுமென உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வலியுறுத்தி உள்ளார். அதுமட்டுமின்றி, சர்வதேச போர் விதிகளை மீறி உக்ரைன் மீது போர் தொடுத்து அப்பாவி பொதுமக்கள் உயிரை பலி வாங்கும் ரஷ்யா பதிலளிக்க வேண்டுமென சர்வதேச நீதிமன்றத்திலும் உக்ரைன் வழக்கு தொடுத்துள்ளது. உக்ரைன் குடியிருப்புப் பகுதிகள், மழலையர் பள்ளிகள் மற்றும் மருத்துவமனைகள் மீது ரஷ்யா பீரங்கி குண்டு தாக்குதல் நடத்தியதற்கான ஆதாரங்களைத் திரட்டி, ஹேக்கில் உள்ள சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களாகச் சமர்பிப்பதாக அமெரிக்கா உறுதி அளித்துள்ளது. சர்வதேச அளவிலும், உள்நாட்டிலும் ரஷ்ய அரசுக்கு எதிர்ப்புகள் வலுப்பதால் அதிபர் புடின் போரை கைவிட வேண்டிய கட்டத்திற்கு தள்ளப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, இவ்விவகாரத்தில் திடீர் திருப்பமாக பெலாரசில் ரஷ்யாவுடன் போர் நிறுத்த பேச்சுவார்த்தை நடத்த உக்ரைன் அரசு நேற்றிரவு ஒப்புக் கொண்டது. இதற்காக உக்ரைனின் தூதுக்குழு பெலாரசின் எல்லையோர நகரமான கோமலுக்கு வர இருப்பதாக ரஷ்ய ஊடகங்கள் நேற்று தகவல் வெளியிட்டன. இதை உக்ரைன் அதிபர் அலுவலகமும் உறுதிபடுத்தி உள்ளது. பெலாரசில் போர் நிறுத்த பேச்சுவார்த்தை நடத்த ரஷ்ய அதிபர் புடின் அழைப்பு விடுத்திருந்த நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வேறு நாட்டில் பேச்சுவார்த்தை நடத்த வலியுறுத்தி இருந்தார். பெலாரஸ் மூலமாக தங்கள் நாட்டில் ரஷ்ய படைகள் ஊடுருவி வரும் நிலையில் அங்கு பேச்சுவார்த்தை நடத்த விருப்பமில்லை என அவர் முதலில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது. கோமலில் ரஷ்ய குழுவுடன் பேச்சுவார்த்தை நடக்கஇருப்பதாகவும், பேச்சுவார்த்தை நடக்கும் வரை உக்ரைனில் ராணுவ நடவடிக்கை தொடரும்என வும் ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பேச்சுவார்த்தை எப்போது நடக்கும் என்பது குறித்த தகவல்கள் வெளியிடப்படவில்லை.

ஹிட்லரைப் போல் புடினையும் வீழ்த்துவோம்

ரஷ்யாவுக்கு எதிரான போரில் விருப்பமுள்ள சாமானிய மக்களும் ஆயுதம் ஏந்த உக்ரைன் அரசு அனுமதி வழங்கி உள்ளது. இதேபோல், உக்ரைனுக்கு ஆதரவாக கைகொடுக்கும் வெளிநாட்டவர்களுக்காக தனது ராணுவத்தில் சர்வதேச படைப்பிரிவு ஒன்றையும் அறிமுகப்படுத்தி உள்ளது. இது குறித்து உக்ரைன் வெளியுறவு அமைச்சர் மைடிரோ குலேபா தனது டிவிட்டரில், 'உக்ரைன் படையில் இணைய விரும்பும் வெளிநாட்டவர்கள் அவரவர் தூதரகங்கள் மூலமாக தொடர்பு கொள்ளலாம். நாம் ஒன்றிணைந்து ஹிட்லரை வீழ்த்தியது போல, புடினையும் வீழ்த்துவோம் வாருங்கள்,' என கூறி உள்ளார்.

NATIONAL HEALTH MISSION TAMILNADU
HIRING SERVICES OF CHARTERED ACCOUNTANT / COST ACCOUNTANT FIRM FOR CONCURRENT AUDIT OF 37 DISTRICT HEALTH SOCIETIES (DHS) AND STATE HEALTH SOCIETY FOR THE FINANCIAL YEAR 2022 - 23 UNDER NATIONAL HEALTH MISSION (NHM), TAMILNADU.
The Tamil Nadu State Health Society, invites 'Proposals for audit' from the **firms of Chartered Accountants empanelled with C&AG and eligible for PSUs audit for the year 2022-23 having a Registered Head office within Tamilnadu** as per the Terms of Reference provided in the RFP. The selection and appointment of Statutory Auditor will be made on lowest Quote method.
Detailed RFP : Detailed Request for Proposal (RFP) comprising Background, Terms of Reference (TOR) and Guidelines for submitting the proposal can be either downloaded from the website **https://www.nhm.tn.gov.in/en/tenders** or this can be collected from the O/o Mission Director, State Health Society, 6th floor, DMS Annexe Building DMS Complex, 359-Annasalai, Chennai - 600 006. between **11 a.m. and 4.30 p.m. from 04 - 03 - 2022**
Important Dates:

Last date for collection of RFP from Office of SHS	: 10.03.2022 at 3.00 pm
Date of Pre-bid conference	: 15.03.2022 at 3.00 pm
Last date for submission of Proposal to SHS	: 21.03.2022 at 3.00 pm
Date of opening of technical bid	: 21.03.2022 at 3.30 pm
Date of opening of financial bid	: 25.03.2022 at 2.30 pm
Venue for Pre-bid Conference	: Mission Directorate, State Health Society, 5th Floor, DMS Complex, 359, Annasalai, Chennai -6.

DIPR / 097 / DISPLAY / 2022
MISSION DIRECTOR State Health Society
சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

ICICI Home Finance
கார்ப்ரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட் ஐசிஐசிஐ எச்எஃப்சி டவர், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059, இந்தியா
கிளை அலுவலகம்: ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், 2வது தளம், ஸ்வர்ணாம்பிகை பிளாஸா, ஒமலூர் பிரதான சாலை, சேலம்-636009
[விதி 8(6) விதிகளை காண்க]
அசையா சொத்துகள் விற்பனை அறிவிப்பு
கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகள் உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.
இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட கடனீட்டு கடனீந்தேரிடம் அடமானம் வைக்கப்பட்ட/உரிமை அளிக்கப்பட்ட, ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி லிமிடெடின் அதிகாரப்பூர்வ அதிகாரியால் அடையாளப்பூர்வ சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் அசையா சொத்து இதன்கீழ் கொடுக்கப்பட்ட குறு விவரங்களின்படி "உள்ளது உள்ளவிதத்தில்", "உள்ளது எதுவோ அது" மற்றும் "உள்ளது எதுவாறு", மேலும் "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் விற்பனை செய்யப்படவுள்ளது.

வ. எண்	கடன்தாரர்(கள்)/ உப கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகள் பெயர்/ கடன் கணக்கு எண்	தெரிந்த வில்லங்கங்கள் ஏதேனுமிருந்தால் அவற்றுடன் கூடிய கடனீட்டுச் சொத்து(கள்) விவரங்கள்	நிலுவைத் தொகை	நிர்ணய விலை / முன்வைப்புத் தொகை	சொத்து பார்வையிடும் நாள் மற்றும் நேரம்	ஏலத் தேதி & நேரம்
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ)	(ஊ)	(எ)
1.	K லட்சுமி (கடன்தாரர்) குமார் K (உப-கடன்தாரர்) கடன் கணக்கு எண் LHSAL00001262135/ LHSAL00001262136	S.F. எண் 17/6 B2, பொன்னாரம்பட்டி, வாழப்பாடி வட்டம், சேலம் மாவட்டம், தமிழ்நாடு 636115	₹16,68,528/- (23 பிப்ரவரி, 2022 தேதியன்று)	Rs. 24,61,450/- / Rs.2,46,145/-	மார்ச் 25, 2022 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை	மார்ச் 30, 2022 பிற்பகல் 02.00 மணி முதல் 03.00 மணி வரை

இயங்குதள ஏலம் எங்கள் ஏல முகமை ஆக்ஸன் டைர் இணையதளத்தில் (URL **இணைப்பு – https://sarfaesi.auctiontiger.net/EPROC/**) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிக்கப்படுவோர் **29 மார்ச் 2022 மாலை 05.00 மணிக்கு** முன்பு வரை மேற்கொண்டு வட்டியுடன் மொத்த நிலுவைத்தொகைகளை செலுத்த கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது இல்லையெனில் இந்த கடனீட்டுச் சொத்துகள் மேற்கூறிய அட்டவணைப்படி விற்பனை செய்யப்படும்.
எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், 2வது தளம், ஸ்வர்ணாம்பிகை பிளாஸா, ஒமலூர் பிரதான சாலை, சேலம்-636009** இடத்தில் **29 மார்ச் 2022 மாலை 04.00 மணிக்கு** அல்லது அதற்கு முன்பு முன்வைப்புத்தொகை (EMD) RTGS/ கேட்பு வரைவோலை (DD) (நிரல் உ காண்க) சமர்ப்பிக்கலாம். எதிர்நோக்கும் ஏலதாரர்(கள்) மேற்குறிப்பிட்ட நேரத்தின்படி அவர்தம் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்க இயலவில்லை என்றால் கையொப்பமிட்ட ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் நகல்பிரதியை ஐசிஐசி வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், **ஐசிஐசிஐ வீட்டுவசதி நிதி நிறுவனம் லிமிடெட், 2வது தளம், ஸ்வர்ணாம்பிகை பிளாஸா, ஒமலூர் பிரதான சாலை, சேலம்-636009** இடத்தில் **29 மார்ச் 2022 மாலை 5.00 மணி** அல்லது அதற்கு முன்பு சமர்